


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) சென்னையில் தனியார் ஓட்டலில் நடைபெற்ற ஃபிக்கி (FICCI) மீடியா & என்டர்டெயின்மென்ட் பிசினஸ் கான்கிளேவ் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வில் நடிகர் கமலஹாசன், ஃபிக்கி (FICCI) மீடியா & என்டர்டெயின்மென்ட் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ‘தமிழ்நாட்டை பொழுதுபோக்கின் மையமாக மாற்ற வேண்டும்’ என்ற – முத்தமிழறிஞர்

# கலைஞரின் லட்சியத்தை நனவாக்க - நமது முதல்வர் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறார்!

## இந்திய வர்த்தகம் – தொழில்துறைக் கூட்டமைப்பு மாநாட்டில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை,பிப்.23-

**சென்னை, ஐ.டி.சி. ஓட்டலில், இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு (FICCI) - ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் தொழில் மாநாடு - சவுத் கனெக்ட் 2025-ஐ துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**




ஃபிக்கி (FICCI) ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் தொழில் மாநாடு - சவுத் கனெக்ட் -2025-ஐ இன்று துவக்கி வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாடு அரசும் நமது திராவிட முன்னேற்றக் கழகமும் ஃபிக்கியுடன் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. 2009-ஆம் ஆண்டு ஃபிக்கி ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் தொழில் மாநாட்டை, தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்ததை நினைவுகூர விரும்புகிறேன்.

அதே போல எனக்கும் இந்த மேடை புதிதல்ல. 2023-ஆம் ஆண்டு நடைபெற்ற ஃபிக்கி ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் தொழில் மாநாடு - சவுத் கனெக்ட்-ஐ நான் தொடங்கி வைக்கிற வாய்ப்பைப் பெற்றேன். இன்றைக்கு மீண்டும் அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். அதற்கு என்னுடைய நன்றியை ஃபிக்கி-க்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**சமூக மாற்றம் சமூக நீதி!**

ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையானது, விடுதலைக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் துடிப்பாக இருந்து வந்துள்ளது. நாட்டின் பிற பகுதிகள் பொழுதுபோக்கை முக்கியமாக கேளிக்கை மற்றும் மகிழ்ச்சிக்காகப் பயன்படுத்தியபோது, நமது திராவிட இயக்கம் அதை சமூக மாற்றத்தையும் சமூக நீதியையும் கொண்டு வருவதற்கான சக்திவாய்ந்த கருவியாகப் பயன்படுத்தியது. பொழுதுபோக்கு மூலமாக, சமூக சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துச்சொன்ன இயக்கம் திராவிட இயக்கம் மட்டும்தான்.

நமது தலைவர்களான பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் எழுதிய பல புரட்சிகர திரைக்கதை வசனங்கள் முற்போக்குச் சிந்தனைகளை மாநிலத்தின் ஒவ்வொரு மூலைக்கும், நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் கொண்டுபோய்ச் சேர்த்தன. 1952-ஆம் ஆண்டு முதல் தனது இறுதிமூச்சு வரை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சமூகத்தைச் சீர்திருத்த, சினிமாவைப் பயன்படுத்தி, இத்துறையில் அயராது உழைத்தார். குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ‘பராசக்தி’ தமிழ் தென்னிந்திய திரையுலகின் திசை வழியையே மாற்றி அமைத்தது.

**நுகர்வோர் விருப்பங்கள்!**

ஊடகங்களும் பொழுதுபோக்குத் துறையும் இன்று பெரும் மாற்றங்களை சந்தித்து வருகின்றன. புதிய தொழில்நுட்பம், மாறிவரும் நுகர்வோர் விருப்பங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்களின் எழுச்சி ஆகியவை, இந்த மாற்றங்களுக்குக் காரணமாக இருக்கின்றன. செழுமையான பண்பாடு மற்றும் பல்வேறு வகைப்பட்ட பார்வையாளர்களுடன், இந்தியா இந்த மாற்றத்தை வழிநடத்துவதற்கும், உலகளாவிய பொழுதுபோக்கின் தன்மையை மாற்றியமைப்பதற்குமான தனித்துவமான இடத்தில் உள்ளது.

2009 - ஆம் ஆண்டு இந்த மாநாட்டில் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசும் போது, ``தமிழ்நாட்டைப் பொழுதுபோக்கின் மையமாக மாற்ற வேண்டும் என்பதே எனது லட்சியம்” என்று சொன்னார்கள். கலைஞர் அவர்கள் கூறிய அந்த லட்சியத்தை, கனவை நனவாக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு சில எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றல்**

தமிழ்நாடு அரசு 152 ஏக்கர் பரப்பளவில், அதிநவீன திரைப்பட நகரத்தை சென்னையில் அமைத்து வருகிறது. இந்த உலகத்தரம் வாய்ந்த நகரத்தில் மேம்பட்ட போஸ்ட் புரொடக்ஷன் ஸ்டூடியோக்கள், மெய்நிகர் தயாரிப்புத் தொழில்நுட்பங்கள், அனிமேஷன் மற்றும் வி.எஃப்.எக்ஸ். ஸ்டூடியோக்கள், எல்.ஈ.டி. சுவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கான ஐந்து நட்சத்திர விடுதிகள் ஆகியவை இடம் பெறும். இந்தத் திட்டம் புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2010-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில், `தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம்’, ‘தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம்’, `தென்னிந்திய நடிகர் சங்கம்’, `தமிழ்த் தொலைக்காட்சி நடிகர்கள் சங்கம்’ போன்ற அமைப்புகளுக்கு, அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டிக்கொள்ள கேளம்பாக்கம் அருகே 90 ஏக்கர் நிலம் 99 ஆண்டுகள் குத்தகைக்கு ஒதுக்கப்பட்டது.

அதற்கான அரசாணையின்படி, மூன்று ஆண்டுகளுக்குள் குடியிருப்பு கட்டடங்களைக் கட்டி முடித்திருக்கவேண்டும். ஆனால், பயனாளிகள் கட்டுமானத்தை முடிக்க முடியாமல் போனதால், அந்தக் குத்தகை காலாவதி ஆகிவிட்டது.

**திருத்தியமைக்கப்பட்ட அரசாணை!**

இந்நிலையில், அந்த அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என திரையுலக சங்கங்கள் கோரிக்கை விடுத்தன. அவர்களின் நிலைமையைப் புரிந்துகொண்டு, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முந்தைய அரசாணையைத் திருத்தியமைத்து, கட்டடங்கள் கட்டுவதற்கு நிலத்தைப் பயன்படுத்துவதை எளிதாக்க முடிவு செய்துள்ளார். திருத்தியமைக்கப்பட்ட அரசாணை, சமீபத்தில் வெளியிடப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திறமையான வல்லுநர்கள், ஒப்பீட்டளவில் குறைவான செலவுகள் மற்றும் இத்துறைக்கு ஆதரவான கொள்கைகளால், போஸ்ட் புரொடக்ஷன், அனிமேஷன், கேமிங், ஏ.ஆர்/வி.ஆர் (AR/VR) மற்றும் வி.எஃப்.எக்ஸ் (VFX) ஆகியவற்றுக்கான உலகளாவிய மையமாக தமிழ்நாடு மாறி வருகிறது. உயர்தர படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைத் தேடும் சர்வதேச நிறுவனங்களை நாங்கள் வரவேற்கிறோம். அறிவுசார் சொத்துரிமையைப் பாதுகாக்கும், நெறிமுறைகளை நிலைநிறுத்தும், பொறுப்பான கட்டமைப்பிற்குள் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் பயனுள்ள தீர்வுகளை உருவாக்க, தொழில்துறைப் பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்ற நமது அரசு உறுதிபூண்டுள்ளது.

**எதிர்காலத்தை வடிவமைப்போம்!**

ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையைப் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புக்கான வாய்ப்பாக மட்டுமல்லாமல், நமது செழுமையான பண்பாட்டை உலகிற்கு வெளிப்படுத்தும் தளமாகவும் நாங்கள் பார்க்கிறோம். இந்தச் செழிப்பான தொழில்துறைக்குத் தொடர்ந்து ஒத்துழைத்து, புதுமைகளை உருவாக்கி, மாறிவரும் எதிர்காலத்தை வடிவமைப்போம்.

இங்கே பேசும்போது, `உலகநாயகன்’ கமல் சார் ஒரு கோரிக்கையை முன் வைத்தார்கள். அதாவது நகராட்சி நிர்வாகத்தால் வசூலிக்கப்படும் கேளிக்கை வரியில் இருந்து, முழு வரிவிலக்கு வேண்டும் என வேண்டுகோள் வைத்திருந்தார். உங்கள் கோரிக்கையின் முக்கியத்துவம் என்ன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். முந்தைய ஆண்டுகளில் இந்த நடைமுறை எவ்வாறு செயல்பட்டது என்பது சாருக்குத் தெரியும் என்றும் நான் நம்புகிறேன். இந்தக் கோரிக்கையை நிச்சயமாக, நமது முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுசெல்வேன்.

இது பற்றி முழுமையாக ஆய்வு மேற்கொண்டு, சட்ட விதிகளை ஆராய்ந்து நீங்கள் எல்லாம் மகிழ்கின்ற வகையிலே, வரும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் அறிவிப்பார்கள். அதற்கு நான் துணை நிற்பேன் என்ற உறுதியை இந்த நிகழ்ச்சியின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். ஃபிக்கி ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் தொழில் மாநாடு - சவுத் கனெக்ட் 2025 வெற்றிகரமாக அமைய எனது வாழ்த்துகள்.

இவ்வாறு அவர் வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்!**

நடிகர் கமல்ஹாசன், ஃபிக்கி துணைத் தலைவர் மற்றும் சன்மார் குழுமத் தலைவர் விஜய் சங்கர், தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்கள் கவுன்சில் தலைவர் முரளி ராமசாமி, இந்திய திரைப்படக் கூட்டமைப்பின் தலைவர் ரவி கோட்டக்கரா, ஃபிக்கி ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு கமிட்டி தலைவர் மற்றும் ஜியோ ஸ்டார் என்டெர்டெய்ன்மென்ட் தலைமை செயல் அதிகாரி கெவின் வாஸ், ஃபிக்கி ஊடகம் மற்றும்பொழுதுபோக்கு கமிட்டி துணைத் தலைவர் மற்றும் மெட்டா நிறுவன இந்தியத் தலைமை அதிகாரி சந்தியா தேவநாதன், ஃபிக்கி தமிழ்நாடு மாநில கவுன்சில் தலைவர் மற்றும் திரிவிட்ரான் நிறுவன குழுமத்தின் மேலாண் இயக்குநர் ஜி.எஸ்.கே. வேலு, வார்னர் பிரதர்ஸ் - டிஸ்கவரி நிறுவன இந்தியத் தலைவர் அர்ஜுன் நோவார், கர்நாடக திரைப்பட வர்த்தக சபையின் தலைவர் எம். நரசிம்மலு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

---

## முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது – திரைப்படத் துறையினர் பையனூரில் குடியிருப்புகள் கட்டிக் கொள்ள குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலங்கள்!

# தற்போது பயன்படுத்திடும் வகையில் புதுப்பிக்கப்பட்ட அரசாணைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – திரைப்படத் துறையினரிடம் வழங்கினார்!

## தமிழ்நாடு முதலமைச்சருக்கு – திரைத் துறையினர் நன்றி தெரிவித்தனர்!

*சென்னை, பிப்.23-*

***தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை திரைப்படத்துறையினர் நேரில் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பையனூரில் குடியிருப்புகள் கட்ட குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலங்களின் அரசாணைகளை தற்போது பயன்படுத்திடும் வகையில் புதுப்பித்து வழங்கியதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.***

***அதன் விவரம் வருமாறு :***

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2010 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் பையனூரில் தெரிவு செய்யப்பட்ட 90 ஏக்கர் நிலத்தில், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்திற்கு (FEFSI) 65 ஏக்கர், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்திற்கு 10 ஏக்கர், தமிழ்நாடு சின்னத்திரைக் கலைஞர்கள் சங்கத்திற்கு 8 ஏக்கர் மற்றும் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு 7 ஏக்கர் என அச்சங்கங்களின் உறுப்பினர்களுக்கான அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்காக தொண்ணூற்று ஒன்பது (99) ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கி அரசாணைகள் வெளியிடப்பட்டன. மேலும் ஆண்டுக் குத்தகையாக ரூ.1000/ வீதம் குத்தகை நிர்ணயம் செய்து, தமக்கென அமைத்துள்ள வீட்டு வசதி சங்கங்களின் மூலம் அடுக்குமாடி கட்டி சங்க உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்திடவும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.*

*நிபந்தனைகளின்படி, மூன்று ஆண்டுகளுக்குள் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்க வேண்டிய நிலையில், அடுக்குமாடி வீடுகள் கட்டப்படாததால், மேற்கண்ட சங்கங்கள் அரசாணைகளை புதுப்பித்துத் தர வேண்டி 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை வைத்தனர்.*

*எந்த நோக்கத்திற்கு குத்தகைக்கு நிலம் வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே, அதே நிபந்தனை களுடன், ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்றாண்டு களுக்குள் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கி, 20.2.2025 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பையனூரில் குடியிருப்புகள் கட்ட குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலங்களின் அரசாணைகளை தற்போது பயன்படுத்திடும் வகையில் புதுப்பிக்கப்பட்ட அரசாணையை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) திரைப்படத் துறையினரிடம் வழங்கினார்.*

*அரசாணைகளை புதுப்பித்து வழங்கியதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் திரைப்படத்துறையினர் நன்றி தெரிவித்தார்கள்.*